

பாடம் 7

ஆகஸ்ட் 10-16

# இயேசுவும் எளியவரும்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *லூக் 1:46-55; 4:16-21; 7:18-23; மத் 12:15-21; மத் 21:12-16; மாற்கு 11:15-19; ஏசா 53:3-6.*

**மனன வசனம்:** கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார். லூக்கா 4:18,19.

தேவன் எப்படிப்பட்டவர் என்பதை உலகத்திற்கு வெளிப்படுத்துவதற்காகவும் இயேசு மனிதனாக வந்தார். தம்முடைய போதனைகள், தியாகம், வாழ்க்கைமூலம் வெளிப்படுத்தினார். தேவனை வெளிப்படுத்தும் நோக்கத்திலேயே மக்களுடன் இடைபட்டார். மக்களின் வாழ்க்கையில் மெய்யான, உடனடி மாற்றங்களை உண்டாக்கினார்.

இயேசுவின் இந்த ஊழியம்பற்றி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும், இயேசுவின் தாயாகிய மரியாளும் முன்னுரைத்தார்கள். தம்முடைய முதல் பிரசங்கத்தில், இயேசுதாமே சொன்னார். லூக்கா 4. மேலும், சுவிசேஷ எழுத்தாளர்களும்கூட அவரைப்பற்றி பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் சொன்னதைவைத்து எழுதுகிறார்கள். எனவே எளியோர், ஒடுக்கப்பட்டோர்குறித்து அத்தீர்க்கதரிசிகள் வலியுறுத்திய அதே அக்கறை இயேசுவின் வாழ்க்கையில் வெளிப்பட்டது.

ஆனால் சுயலாபத்திற்காக வாழ்ந்த மதத்தலைவர்கள் இயேசுவை அநியாயமாக, கைதுசெய்து, பொய்விசாரணை செய்து, சிலுவையில் அறைந்தார்கள். இயேசுவுக்கு அநியாயம் நேர்ந்தது; அவருடைய மரணத்தில் பாவத்தின் கொடூரம் வெளிப்பட்டது. அவருடைய உயிர்த்தெழுதலில் ஜீவனும் நன்மையும் இரட்சிப்பும் வெற்றியுடன் மிளிர்ந்தன.

*2019, ஆகஸ்ட் 17 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## ஞாயிறு ஆகஸ்ட் 11

# மரியாளின் பாடல்

காபிரியேல் தூதனிடமிருந்து மரியாளுக்கு ஒரு செய்தி வந்தது. உன்னதமானவரின் குமாரனாகிய இயேசு மகனாகப் பிறக்கப்போகிறார் என்பதே அந்தச் செய்தி. அவளுடைய நெருங்கிய உறவினளான எலிசபெத்தும் அற்புதமாக ஒரு குழந்தையைப் பெறவிருந்தாள்; மரியாள் தன் கர்ப்பம்பற்றி யாரிடமும் சொல்லாமல் அவளைப் பார்க்க சென்றாள். மரியாள் சொல்லாமலேயே அந்தச் செய்தியை எலிசபெத்து ஆவியானவரால் அறிந்துகொள்கிறாள். இருவரும் தேவனுடைய நன்மைக்காகவும் வாக்குறுதிகளுக்காகவும் போற்றுகிறார்கள்.

**கேள்வி: 'வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்' (லூக் 1:49) என்று மரியாள் தனிப்பட்ட விதத்திலும், பொதுவாகவும் தேவனைத் துதிக்கிறாள். லூக் 1:46-55. நம்முடைய தொழுகையும் துதியும்கூட எவ்வாறு தனிப்பட்டவிதமாகவும், பொது வானவிதமாகவும் இருக்கவேண்டும்?**

சங்கீதம் அல்லது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் எழுத்துகளுக்கு இணையான பாடல் இது. தேவன்மேல் நன்றியும் ஆச்சரியமும் நிறைந்து மரியாள் பாடுகிறாள். தனிப்பட்ட விதத்தில் தன்னுடைய வாழ்க்கையில் செய்த கிரியையையும், பொதுவாக, தன் தேசத்திற்காகவும் மனித இனத்திற்காகவும் தேவன் வைத்திருந்த மிகப்பெரிய திட்டத்தையும் மரியாள் உணர்ந்திருந்தாள்.

தேவன் வல்லவர், துதிக்குப்பாத்திரர் என்பது மட்டுமல்ல; அவர் இரக்கமுள்ளவர், எளியோர்-ஒடுக்கப்பட்டோர்-தரித்திரர்மேல் விசேஷித்த அக்கறையுள்ளவர் என்பதையும் மரியாள் அறிந்திருந்தாள். மரியாளின் கர்ப்பம்குறித்த 'நற்செய்தியை' அறிவித்த அந்தத் தூதன் சென்ற உடனேயேஇவ்வாறு பாடுகிறாள்: 'பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.' லூக் 1:52,53.

இயேசுவை 'ஆண்டவர்' (ஆளுகிறவர்) என்று எலிசபெத்து சொல்கிறாள். லூக் 1:43. அவருடைய ஆளுகையின் ராஜ்யம் வித்தியாசமானது. இன்றைய சமுதாய அமைப்புகளையுடைய ராஜ்யங்களைப் போன்றதல்ல; அவற்றிற்கு 'முற்றிலும் மாறுபாடான ஒரு ராஜ்யம்.' அத்தகைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க இயேசு வந்ததாக வியாக்கியானர்கள் கூறுகிறார்கள். இயேசுவின் ராஜ்யத்தில் அதிகாரமுள்ளவர்களும் ஐசுவரியவான்களும் தாழ்த்தப்படுகிறார்கள்; தரித்திரரும் ஒடுக்கப்பட்டோரும் விடுவிக்கப்பட்டு, 'நிரப்பப்பட்டு,' உயர்த்தப்படுகிறார்கள்.

தேவனுடைய ராஜ்யத்தைப் போன்றதாக இன்று சபை காணப்படுமானால், மரியாள் விவரிப்பதுபோன்ற 'தலைகீழான' ராஜ்யத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சபை எவ்வாறு திகழ்ந்திருக்க முடியும்? அதேசமயம், அதிகாரமும் ஐசுவரியமும் பெற்றிருப்பவர்கள்கூட கிறிஸ்துவின் அன்புக்குப் பாத்திரவான்கள்தாம். எனவே, அவர்களுக்கும் நாம் அநியாயம் செய்யக்கூடாது. இதை எவ்வாறு சாத்தியமாக்குவது?

# இயேசுவின் ஊழியவாசகம்

இயேசுவின் முதல் பொதுப்பிரசங்கம் ஏசா 61:1,2ஐப் பற்றியது. அது தினவேதப்பகுதியாக இருந்திருக்கலாம்; அல்லது, அவரே அதை எடுத்து வாசித்திருக்கலாம். லூக்கா 4:16-21 இல் உள்ள அந்தச் சுருக்கமான பிரசங்கத்தின் முடிவில் 'உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று' என்று சொன்னார். லூக் 4:21. இயேசுவினுடைய பொது ஊழியத்தின் துவக்கத்தை லூக்கா இவ்வாறுதான் விவரிக்கிறார்.

'தலைகீழ்' ராஜ்யம்பற்றி மரியாள் பாடினபிரகாரமே இயேசுவின் ஊழியமும் இருந்தது. இயேசுவும் இயேசுவின் அனுபவம்பற்றி எழுதும் லூக்காவும் இயேசுவின் ஊழியத்தை விவரிக்க ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அதையேதான் 30 வருடங்களுக்கு முன்னர் மரியாளும் பாடியிருந்தாள். தரித்திரத்திலும் வேதனையிலும் ஒடுக்கத்திலும் இருந்தோரை மனதில்வைத்து நற்செய்தியை இயேசு அறிவிக்கவிருந்தார்.

இயேசு தம்முடைய ஊழியவாசகமாக ஏசாயா 61இலிருந்து இந்த வசனங்களைச் சுட்டிக்காட்டுகிறார். ஆவிக்குரிய ரீதியிலான, நடைமுறை ரீதியிலான ஊழியத்தையும் ஊழியப்பணியையும் இயேசு செய்யவிருந்தார். ஆவிக்குரிய வாழ்க்கை வேறு, நடைமுறை வாழ்க்கை வேறு அல்ல என்பதையும் எடுத்துக்காட்ட விரும்பினார். மக்களுடைய சரீர, அன்றாடத் தேவைகளைச் சந்திப்பதும் ஒருவிதத்தில் அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதுதான் என்பதை இயேசுவும் அவருடைய சீடர்களும் அறிந்திருந்தார்கள்.

**கேள்வி: லூக் 4:16-21; 7:18-23 வசனங்களை ஒப்பிடுங்கள். தம்மிடம் கேட்டவர்களுக்கு இயேசு அவ்வாறு பதிலளித்தது ஏன்? இயேசுவின் தெய்வதன்மை, மேசியாதன்மை குறித்து உங்களிடம் கேட்டால், நீங்கள் என்ன பதில்சொல்வீர்கள்?**

இயேசு தம் சீடர்களை அனுப்பியபோது, இப்படிப்பட்ட ஊழியப்பணியைச் செய்யும்படி கட்டளை கொடுத்தார். 'பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று பிரசங்கிக்கச் சொன்னார். அதேசமயம் 'வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணி, மரித்தோரை எழுப்பி, பிசாசுகளைத் துரத்தி, இலவசமாய்ப் பெற்றதை இலவசமாய்க் கொடுக்கும்படி' சீடர்களிடம் சொன்னார். மத் 10:7,8. இயேசுவின் நாமத்தினால் செய்யப்பட்ட ஊழியத்தில், அவருடைய ஊழிய விழுமியங்களும் நியதிகளும், அவர் அறிவித்த ராஜ்யமும் இடம்பெறவேண்டியிருந்தது. அடிமட்டத்தில் உள்ளோரையும், தொலைந்துபோனோரையும் தூக்கிவிட இயேசு முயன்றதுபோலவே அவர்களும் ஊழியப்பணி செய்யவேண்டியிருந்தது.

தொலைந்துபோன உலகத்தாருக்கு முத்தூதை அறிவிக்கிற அதேவேளையில் நாமும் எவ்வாறுபிற உதவிகளையும் செய்யலாம்? அனைத்தும் 'தற்காலச் சத்தியத்துடன்' சம்பந்தப்பட்டிருப்பது ஏன் முக்கியமானது?

# இயேசு குணமாக்குகிறார்

இயேசுவின் அற்புதங்கள், அதுவும் சுகமாக்கும் அற்புதங்கள் சுவிசேஷப் புத்தகங்களை அழகுபடுத்துகின்றன. ஏசாயா சொன்னது போல, அவர் குருடரைக் குணமாக்கினார். வியாதியால் சிறைப்பட்டிருந்தவர்களை, அதுவும் பல வருடங்கள் சிறைப்பட்டிருந்தவர்களை விடுவித்தார். உதாரணமாக, மாற்கு 5:24-34; யோவான் 5:1-15. அது மட்டுமல்ல, முடவரை நடக்கச்செய்தார், குஷ்டரோகிகளைச் சொஸ்தமாக்கினார். அசுத்தமாயிருந்தவர்களைத் 'தொட்டுச்' சுகப்படுத்தினார். மக்களுடைய இருதயங்களிலும் சரீரங்களிலும் குடியிருந்த பிசாசுகளைத் துரத்தினார்; மரித்தோரை உயிருடன் எழுப்பினார்.

மக்களைக் கவரவும், தம்மை விமர்சித்து சந்தேகதப்பட்டவர்களுக்கு தம் வல்லமைகளைக் காட்டவுமா அப்படிச் செய்தார்? இல்லை. மாறாக, சுகமாக்கியவர்களிடம் அதுபற்றி யாரிடமும் சொல்லவேண்டாமென்றார். ஆனால் சுகமாக்கப்பட்டவர்களால்தான் அந்த அற்புதமான செய்தியை யாரிடமும் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அதைவிட முக்கியமான நோக்கத்திற்காக இயேசு அந்த அற்புதங்களைச் செய்தார். அவர் தருகிற இரட்சிப்பை மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இறுதி நோக்கம்.

இயேசு எவ்வளவு மனதுருக்கமுள்ளவர் என்பது அந்த அற்புதங்களில் வெளிப்பட்டது. 5000 பேரைப் போஷித்த சம்பவத்திற்குமுன், 'இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.' மத் 14:14. மக்களுடைய வேதனையை இயேசு உணர்ந்தார்; தம்மிடம் உதவிநாடி வந்தவர்களுக்கு உதவவும், அவர்களைத் தூக்கிவிடவும் தம்மால் முடிந்தவற்றையெல்லாம் செய்தார்.

**கேள்வி: மத் 12:15-21இல் சொல்லப்படும் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை வாசியுங்கள். ஒரு சில வியாதியஸ்தர்களைக் குணமாக்குவதைவிட மேலான நோக்கம் இயேசுவிடம் இருந்தது என்பதை எவ்வாறு மத்தேயுவும் ஏசாயாவும் சுட்டிக்காட்டுகிறார்கள்?**

'கிறிஸ்து செய்த ஒவ்வோர் அற்புதமும் அவருடைய தெய்வீகத்திற்கு அடையாளமாக இருந்தது. மேசியாகுறித்து முன்னறிவிக்கப்பட்டவற்றை அவர் செய்தார். ஆனால், பரிசேயர்கள் இந்தக் கிரியைகளைக் கண்டு கசப்படைந்தார்கள். மனிதர்களுடைய வேதனைகளைக் கண்டு யூதத்தலைவர்கள் கொஞ்சமும் மனதுருகவில்லை. கிறிஸ்து குணமாக்கின பலர் பலசமயங்களில் அத்தலைவர்களின் சுயநலத்தாலும் ஒடுக்குதலாலும் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். எனவே அவருடைய அற்புதங்கள் அவர்களைக் கண்டித்தன.' - *EGW, DA, p 406.*

இயேசு குணமாக்கினதில் நியாயமும் மனதுருக்கமும் கலந்திருந்தன. ஆனால் அந்த அற்புதங்கள் மேலான நோக்கமுடையவையாக இருந்தன. மக்களை நித்தியவாழ்விற்கு வழிநடத்துவதே அவருடைய இறுதி நோக்கமாக இருந்தது. யோவான் 17:3.

# தேவாலயத்திலிருந்து துரத்துதல்

சுவிசேஷப் புத்தகங்களில் பெரும்பாலும் சாதுவான ஒரு நபராக இயேசு நம்மைக் கவர்ந்திருப்பார். வியாதிஸ்தர்-சிறுவர்மேல் அக்கறை காட்டுவார், தொலைந்துபோனோரைத் தேடுவார், தேவனுடைய ராஜ்யம்பற்றிப் பேசுவார். அதனால்தான் அவர் கடுமையாக, வேகத்துடன் நடந்துகொண்ட சம்பவங்களை, குறிப்பாக மதத்தலைவர்களுக்கு எதிராக, அன்றைய சில நடைமுறைகளுக்கும் எதிராக அவர் நடந்துகொண்ட சம்பவங்கள் ஆச்சரியத்தை உண்டாக்குகின்றன.

**கேள்வி: மத் 21:12-16; மாற்கு 11:15-19; லூக் 19:45-48; யோவான் 2:13-17 ஆகிய வசனங்களை வாசியுங்கள். ஒரேவிதமான சம்பவம் நான்கு சுவிசேஷப்புத்தகங்களிலுமே காணப்படுவதிலுள்ள முக்கியத்துவம் என்ன?**

---

---

இந்தச் சம்பவம் நான்கு சுவிசேஷப்புத்தகங்களிலும் இடம்பெற்றிருப்பது ஆச்சரியம்தான். கடும்உணர்ச்சியோடு நடந்துகொண்ட சம்பவம் இது. மெய்யான தொழுகை காணப்படவேண்டிய இடத்தில் பலிமிருகங்களின் விற்பனை நடந்ததால் இயேசுவுக்குக் கோபம் வந்தது. அந்தப் பலிமிருகங்கள் சுட்டிக்காட்டின அனைத்தையும், அதாவது நமக்காக அவர் மரிக்கவிருந்த மரணத்தைத் தீட்டுப்படுத்துவதாக அந்த விற்பனை இருந்தது.

எபிரெயத் தீர்க்கதரிசிகளிடமும் இதே அளவு தீவிரத்தைக் காண முடியும். இயேசு, சுவிசேஷ எழுத்தாளர்கள், ஏசாயா, எரேமியா போன்றோர் சங்கீதப்புத்தகங்களிலிருந்து மேற்காள்காட்டிப் பேசுவதிலிருந்து இது புரிகிறது; இந்தச் சம்பவத்தின் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது. இயேசுவை தீர்க்கதரிசியென மக்கள் நினைத்தார்கள். மத் 21:11. தேவாலயத்தில் காசுக்காரர்களையும் வியாபாரிகளையும் துரத்தினபிறகு, அவருடைய போதனைகளைக் கேட்கவும், குணமடையவும் அவரிடம் மக்கள் வந்தார்கள். வந்தவர்கள்தாம் குணமடைந்தார்கள்; அவருடைய போதகத்தைக் கேட்டவர்கள்தாம் மனதில் நம்பிக்கையை அதிகம் பெற்றார்கள்.

மதத்தலைவர்களும் இயேசு ஒரு தீர்க்கதரிசியென நினைத்தார்கள். ஆனால், அவர் தங்கள் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் கெடுத்துவிடுவாரோ என்று பயந்தார்கள். எனவே, முற்காலத்தில் தீர்க்கதரிசிகளைக் கொல்ல தலைவர்கள் திட்டமிட்டதுபோல, இவர்கள் இயேசுவைக் கொல்ல, சதித்திட்டம் தீட்டினார்கள். லூக் 19:47,48.

கிறிஸ்துவின் நாட்களில் தேவாலயம் எப்படி விளங்கவேண்டியிருந்ததோ அப்படித்தான் இன்று நம் உள்ளூர்ச் சபையும் விளங்கவேண்டும். அதற்கு நாம் என்ன செய்யலாம்? அன்று காணப்பட்ட ஆவிக்குரிய ஆபத்துகளை இன்று நாம் எவ்வாறு தவிர்க்கலாம்? ஒரு சில ஆவிக்குரிய ஆபத்துகளைச் சுட்டிக்காட்டுங்கள்.

# கிறிஸ்துவின் சிலுவை

தரித்திரர் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் கூக்குரல்களை தேவன் கேட்கிறார் என்பது ஆறுதலான விஷயம். உலகின் மனித நேயமற்ற செயல்களையும், ஒடுக்குதலையும், அநியாயத்தையும் இயேசுவின் மூலமாக தேவன் அனுபவித்தார் என்பது பிரமிப்பூட்டுகிறது. இயேசு தம் வாழ்விலும் ஊழியத்திலும் மனருக்கமுள்ளவராக, நன்மை செய்கிறவராகக் காணப்பட்டாலும், அவருடைய மரணத்திற்கு, பகையும் பொறாமையும் அநியாயமும் காரணமாக இருந்தன.

கெத்செமனே தோட்டத்தில் வியாகுலத்தோடு இயேசு ஜெபித்ததிலிருந்து அவர் கைதுசெய்யப்பட்டது வரையிலும், அதைத் தொடர்ந்து நடந்த 'விசாரணை', சித்திரவதை, பரிகாசம், சிலுவை, மரணம் போன்றவற்றிலும் கொடிய வேதனையையும் சித்திரவதையையும் வேதனையையும் அடக்குமுறையையும் இயேசு அனுபவித்தார். அவர் குற்றமற்றவர், நல்லவர், பரிசுத்தர் என்பதால் இவற்றையெல்லாம் அதிகமாகவே செய்தார்கள். அவர் 'தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின்ரூபமெடுத்து, மனுஷர்சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.' பிலி 2:7,8. இயேசுவின் தியாகமரணம் எவ்வளவு அருமையானது என்பது இரட்சிப்பின் சம்பவத்தில் வெளிப்படுகிறது. ஆனாலும் இயேசு அனுபவித்த கொடும் வேதனையும் அநியாயமும் நாம் மறக்கமுடியாதது.

**கேள்வி: ஒன்றுமறியாத இயேசு குற்றமுள்ளவர்போல நடத்தப்பட்டதுபற்றி ஏசாயா 53:3-6 என்ன சொல்கிறது? நமக்காக இயேசு என்னவெல்லாம் சகித்தாரெனப் புரிந்து கொள்ள முடிகிறதா?**

---

தீமையும் அநியாயமும் எவ்வளவு தூரம் கொடூரம்செய்யும் என்பதை இயேசுவில் தேவன் உணர்கிறார். குற்றமற்ற ஒருவனைக் கொல்வது பயங்கரம் என்றால், தேவனையே கொல்வது மிகப்பயங்கரம். விழுந்துபோன, உடைந்துபோன நிலையில் நாம் அனுபவிப்பதை எல்லாம் தேவன் அறிவார்; அவருடைய பரிவையும் மனதுருக்கத்தையும், உண்மைத்தன்மையையும் நாம் சந்தேகிக்கமுடியாது. 'நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.' எபி 4:15. நம் தேவனுடைய குணம்குறித்த எத்தகைய வெளிப்பாடு! சிலுவை சுட்டிக்காட்டும் தேவனைக் குறித்த நற்செய்தி நம்மில் நிறைந்திருக்க நாம் என்ன செய்யலாம்?

நமக்காக இயேசு மரித்தார். நமக்காக மட்டுமல்ல, நாம் உதவுகிற எளியவர்களுக்காகவும்தான். எனவே ஆண்டவருக்காகச் செய்கிற அனைத்திலும், குறிப்பாக தரித்திரருக்கு உதவும்போது, இந்த உண்மை எவ்வாறு நம் ஊழியப்பணியின் நோக்கத்திற்கு மையமாக இருக்கவேண்டும்?

## மேலும் படிக்க:

“தம்முடைய கட்டளையை மீறுகிறவர்கள் தண்டிக்கப்படுவார்களென உறுதியான ஆதாரத்தை தேவன் தம் வார்த்தையில் சொல்லியிருக்கிறார். ‘பாவியை நியாயப்படி தண்டிக்கமாட்டார், தேவன் மிகுந்த இரக்கம் உள்ளவர்’ என்று சொல்கிறவர்கள், கல்வாரிச் சிலுவையைப்பார்த்தாலே போதும். தேவ கட்டளை ஒவ்வொன்றையும் மீறினால் நியாயமான தண்டனை உண்டு என்பதற்கும், ‘பாவத்தின் சம்பளம் மரணம்’ என்பதற்கும் பாவமற்ற தேவகுமாரனுடைய மரணம் சாட்சியாக இருக்கிறது. பாவமில்லாதவரான கிறிஸ்து மனிதனுக்காக பாவமுள்ளவரானார். மனிதரின் மீறுதலை அவர் சுமந்தார்; பிதாவின் முகம் அவருக்கு மறைக்கப்பட்டது; அவருடைய உள்ளம் உடைந்தது; மரணம் நேரிட்டது. பாவிகள் மீட்கப்படும்படி, இந்தத் தியாகங்களை எல்லாம் செய்தார். பாவத்தின் தண்டனையிலிருந்து வேறு எந்த வழியிலும் மனிதன் விடுவிக்கப்படக்கூடாதிருந்தது. விலையேறப்பெற்ற இந்தப்பாவநிவாரணத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிற ஒவ்வோர் ஆத்துமாவும்பாவத்தையும்பாவத்தண்டனையையும் தானே ஏற்றுக்கொண்டாகவேண்டும்.’ — *EGW, GC, pp 539,540.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *குற்றமற்றவரான இயேசு குற்றவாளியைப்போலத் தண்டிக்கப்பட்டார். அது தான் அநியாயம்! இந்த முக்கிய உண்மையை எப்போதும் நம் நினைவில் வைத்திருக்கவேண்டியது ஏன் முக்கியம்?*

2 *தாம் அறிவித்த ‘ராஜ்யம்’ ஏதாவது அரசியல் சீர்திருத்தத்தால் உண்டாகக்கூடியதென இயேசு எதுவும் சொல்லவில்லை. புறக்கணிக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோருக்காக உதவிசெய்வதாகச் சொல்கிறவர்கள் வன்முறையையும் ஒடுக்குதலையும் கையாண்ட கதைதான் வரலாற்றில் உள்ளது. ஒடுக்குகிற ஒரு வகுப்பினர்போய் இன்னொரு வகுப்பினர் எழும்பியிருப்பார்கள். புறக்கணிக்கப்பட்டோருக்கு உதவ, உலகஅதிகாரங்களை கிறிஸ்தவர்கள் பயன்படுத்துவதில் தவறில்லை என்றாலும், அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்துவது எப்போதும் தோல்வியில்தான் முடிந்திருக்கிறது. அது ஏன்?*

3 *இரட்சிப்பு எதைக் கூறுகிறது? நீதிபரரான இயேசு அநீதிக்காரரான நம் ஒவ்வொருவருக்காகவும் பாடுபட்டார். நமக்காக ஏறெடுக்கப்பட்ட இந்த மாபெரும் தியாகம் நம்மை எவ்வாறு புதுமனிதர்களாக மாற்றவேண்டும்?*

**பாடச்சுருக்கம்: இயேசுவின் ஊழியமானது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் ஊழியப்பணியின் அடிப்படையில்தான் சுவிசேஷப்புத்தகங்களில் அறிமுகமாகிறகிறது; விவரிக்கப்படுகிறது. மேசியாவாகிய அவர் தரித்திரக்கு நற்செய்தியை அறிவிப்பார், ஒடுக்கப்பட்டோரை விடுவிப்பார், உள்ளம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குவார் என்று சொல்லப்பட்டது. இயேசுவும் தம் ஊழியத்தில் அதை நிரூபித்தார். அவ ருடைய மரணம் அநீதியால் நிகழ்ந்தது; மனிதர்களின் விழுந்துபோன, மனிதநேயமற்ற தன்மையால் நிகழ்ந்தது. நமக்காக அவர் அநியாயமாகக் கொல்லப்பட்டதால்தான் நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், நித்தியவாழ்வின் வாக்குறுதியை நாம் சுதந்தரிப்பதற்கும் வழியுண்டாகியிருக்கிறது.**